E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

# பாரதியார் கவிதைகளில் பெண்ணியம்

## Feminism in the Poems of Bharathiar

**செ. பவித்ரா**, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 2021RO300, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**S. Pavithra,** Research Scholar of Tamil, Reg. No.: 2021RO300, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Affiliated to Bharathiar University, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0505-5433**
**முனைவர் ஆ. மகாலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**Dr. A. Mahalakshmi,** Assistant Professor of Tamil,
Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Affiliated to Bharathiar University Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5234-0750**
**DOI: 10.5281/zenodo.8081909**

### Abstract

*Women are in an indispensable position in Tamil society. Woman occupies an indispensable place in this world. Without women, there would be nothing on earth. Our people worship the earth as their mother. Through Shakti worships, one can know that our society has given importance to women since many centuries ago. Indeed, many of the tamil literary texts have given importance to women. Evidence can be found in literature like "Silapathikaram" and "Manimekalai". One can learn about the status of early women and their bravery through Sangam literature. Tamil people worship women as Gods. The condition of enslaving women who are seen as Gods has changed a lot in modern times. The condition that women should get proper education has gained a lot of acceptance among our people today. Little by little they are recovering from the effects of treating women like slaves and from dowry abuse. However, in few places, this situation is still observed today. Many radical men and women have fought for the development of women and have seen success. In this article, the researcher will see the progress of women from the poems of Bharathiar who plays an important role in the development of women.*

**Keywords:** Feminism, Poems, Bharathiar, Tamil Literature.

**.ஆய்வுச்சுருக்கம்**

*பெண் என்பவள் தமிழ் சமூகத்தில் இன்றியமையாத ஒரு நிலையில் இருக்கிறாள். பெண் என்பவள் இவ்வுலகில் இன்றியமையாத ஒரு இடத்தைப் பெறுகிறாள். பெண்கள் இல்லை எனில் இப்புவியில் ஒன்றுமே இருக்காது. புவியையே நம் மக்கள் தாயாக எண்ணி வழிபடுகின்றனர். நம் சமூகம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர் என்பதை சக்தி வழிபாடுகள் போன்ற இவற்றின் மூலம் அறியலாம். அத்துடன் நமது இலக்கிய நூல்கள் பலவும் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்.*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

*சான்றாக "சிலப்பதிகாரம்", "மணிமேகலை" போன்ற காப்பிய இலக்கியங்கள் மூலம் அறியலாம். முற்கால பெண்களின் நிலையும் அவர்களின் வீரத்தையும் பற்றி சங்க இலக்கியங்களின் வழி அறியலாம். கடவுளாகவே நமது தமிழ் மக்கள் பெண்களை போற்றுகின்றனர். அப்படி கடவுளாக பார்க்கப்படும் பெண்களை அடிமைப்படுத்தும் நிலை என்பது தற்காலத்தில் பெரிதும் மாற்றம் அடைந்து விட்டது. பெண்கள் கல்விபெற வேண்டும் என்ற நிலை இன்று நம் மக்களிடையே பெரிதும் வரவேற்பைபெற்றுள்ளது. பெண்களை அடிமையைப்போல் நடத்தும் நிலை, வரதட்சனை கொடுமை போன்ற பாதிப்புகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் வருகின்றனர். இருப்பினும் ஒரு சில இடங்களில் இந்நிலை இன்றும் காணப்படுகிறது. பெண்களின் வளர்ச்சிக்காக பலர் போராடி வெற்றியையும் கண்டிருக்கின்றனர். அதில் முக்கிய பங்கு வகிக்கும் பாரதியாரின் கவிதைகளில் இருந்து பெண்களின் முன்னேற்ற நிலையை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

**திறவுச்சொற்கள்:** பெண்ணியம், கவிதைகள், பாரதியார், தமிழ் இலக்கியம்.

**முன்னுரை**

பெண் என்பவள் நமது தமிழ் சமுதாயத்தில் கடவுளாகப் பார்க்கப்படுகிறாள். பெண் இவ்வுலகில் உள்ள அனைத்து உறவுகளிலும் இன்றியமையாத இடம் பெறுகிறாள். ஒரு பெண் தாயாகவும், ஒரு நல்ல மகளாகவும், நல்ல மருமகளாகவும், என சமுதாயத்தில் அனைத்து வகையான உறவு நிலைகளிலும் சிறந்த விளங்குவதற்கு அவர்களுடைய மன ஆற்றலே முக்கியமானதாகும். அப்படிப்பட்ட பெண்களுக்கு உண்டான பெயர்களாக *பிங்கள நிகண்டு பக்கம் 151ல் அறிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், தெரிவை, மானினி, சிறுமி, இளம்பிடி,சுரிகுழல், மகடூஉ, காந்தை, மாது, வணிதை, நல்லாள், காரிகை, தளிரியல், அணங்கு, தையல், பெதும்பை , பேதை, மடந்தை, மங்கை, மாயோல், பாவை, பிணா என 25* பெயர்களை பெண்ணின் பெயராக இந்நூல் கூறுகிறது. இதுபோன்று பெண்கள் பலவாறான பெயர்களில் அழைக்கப்பட்டாலும், பெண் என்ற சொல்லே பெரும்பாலும் மக்களால் பயன்படுத்தப்படும் சொல்லாக அமைகிறது. இப்பெண்களை அடிமை நிலையில் இருந்து மாற்றி வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல உதவியவர்கள் பெண்ணியவாதிகள். இப்பெண்ணியம் என்ற சொல் '*பெமினிசம்*' என்ற ஆங்கிலச் சொல்லானது '*பெமினா*' என்ற இலத்தீன் மொழியிலிருந்து உருவான சொல்லாகும். இதற்கு பெண்ணுக்குரிய இயல்பினை உடையவள் என்பது பொருளாகும்.

**பெண்ணிய வளர்ச்சி**

தொடக்க காலத்தில் மனித குலம் தாய்வழிச் சமூகமாக இருந்துள்ளது. பெண்ணே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

குடும்பத் தலைவியாக இருந்து குடும்பத்தை வழி நடத்தி இருக்கிறாள். பல்வேறு சமூக மாற்றத்தால் தாய்வழிச் சமூகம் அழிந்தது. அதன் பின் நாடெங்கும் பெண்கள் பல கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வாறு நடந்த கொடுமைகளுக்கு எதிராக பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் போராட்டம் நடைபெற்றது. 1871 ஆம் ஆண்டு பிரான்சில் பெமினிசம் என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பின் இந்தியாவில் பெண்ணியம் என்ற சொல் 1960 க்கும் பிறகு அதிகமாக பேசப்பட்டது. அதன் பின் இன்றுவரை பெண்கள் பல்வேறான முன்னேற்றங்களை சிறிது சிறிதாக அடைந்து வந்தனர். இன்று நல்ல நிலையில் பல தொழில்களிலும் சிறந்து விளங்குகின்றன. இன்றைய சூழலில் பெண்கள் கல்வி கற்கின்றனர். பல இடங்களில் பாகுபாடின்றி அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பெண்களின் வளர்ச்சிக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் மத்திய மற்றும் மாநில அரசுகள் பெண்கள் கல்வி கற்பதற்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. இதனால் பெரும்பாலான பெண்கள் ஆர்வமாக கல்வி கற்று பல அரசு சார்ந்த துறைகளிலும், அதேபோல் அரசு சாரா தனியார் துறைகளிலும் நல்ல பதவி வகிக்கின்றனர். பெரியார் பெண்களின் முன்னேற்றத்தை தடுப்பதற்கும் அவர்களுக்கு எதிராகவும் சமயங்களே உள்ளது என்று கூறுகிறார். எனவே, அனைவரும் ஒற்றுமையுடன் வாழ சமய ஆதிக்கம் இல்லாத உலகம் படைக்க வேண்டும் என்கின்றார். எனவே சமய ஆதிக்கம் இல்லாத பகுத்தறிவுடைய உலகில் பெண்கள் முன்னேற்றம் அடைய முடியும். என்பதை இந்திரா கூறியுள்ளார். எனவே, இன்றைய கால சூழலில் பெண்கள் நல்ல முன்னேற்ற நிலையில் இருப்பதை நாம் காண முடிகிறது.

**பெண்ணியவகைப்பாடு**

பெண்களின் முன்னேற்றத்திற்காக போராடப்படும் ஒவ்வொரு இடங்களிலும், ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் அப்போராட்டத்தை பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். அப்பெயர்களை கொண்டு சில பெண்ணியம் போராட்டங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்ற சம்பவங்களையும், அதனால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும், வருத்தங்களையும் போக்குவதற்காக நடைபெற்றதே இப்பெண்ணிய போராட்டங்கள். அப்போராட்டங்கள் மூலமாக பெண்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக பல போராட்டங்கள் நடைபெற்றன. அதன் விளைவாக பெண்களுக்காக பல அமைப்புகள் தொடங்கப்படுகின்றனர். இப்போராட்டங்களின் வழியாக தோன்றிய பெண்ணியத்தின் வகைகளாக சில இங்கு குறிப்பிடப்படுகின்றன. அவையாவன, முதல் அலை பெண்ணியம் 12, 13ம் நூற்றாண்டு, இரண்டாம் அலை பெண்ணியம் 1960 முதல் 1970 வரை, மூன்றாம் அலை பெண்ணியம் 1980, நான்காம் அலை பெண்ணியம் 2012, தமிழ் சூழல் பெண்ணியம், மார்க்சியப் பெண்ணியம், தலித் பெண்ணியம், தேசிய பெண்ணியம், இந்துமத

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

பெண்ணியம், நாத்திகப் பெண்ணியம், இஸ்லாமியப் பெண்ணியம் என இவ்வாறு பெண்ணியம் உலகம் முழுவதும் நான்கு அலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தமிழகத்தின் சூழலின் அடிப்படையில் பல பெண்ணிய இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட இன்று வரை செயல்பட்டு வருகின்றன. பெண்களின் வளர்ச்சிக்காக பெண்கள் மட்டுமின்றி பல்வேறு ஆண்களும் போராடி இருக்கின்றன. அவர்களில் குறிப்பிடத்தக்கவராக பாரதியார், பெரியார், பாரதிதாசன், போன்றவர்களை குறிப்பிடலாம். அனைத்து பெண்களுக்கும் எழுச்சி ஊட்டும் வகையில் கவிதை படைத்தவர்களபடைத்தவர்களில் பாரதியாரே முக்கியமானவர்.

**பெண்ணிய இயக்கத்தின் நோக்கம்**

பெண்களை அடக்கி வைக்கும் முறைகளுக்கு எதிராக போராடுவதுடன் நில்லாமல் பெண்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் வளர்ச்சிக்கான பாதைகளை வகுத்துக் கொடுப்பதே பெண்ணிய இயக்கத்தின் நோக்கம் என சாரதாம்பாள் அவர்கள் தனது “பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்” என்ற நூலில் பக். 5ல் கூறுகிறார்.

**பாரதியும் பெண்மையும்**

பெண் விடுதலைக்காக போராடியவர்கள் பாரதியாரும் ஒருவர் *அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு* என்று கேட்ட காலச்சூழலில் பாரதி *ஆணும் பெண்ணும் சமமே* என்று பெண்ணிற்கு பாரதியார் கொடுக்கும் முக்கியத்துவத்தை அவரது கவிதை வரிகளில் நாம் காணலாம். பெண்களுக்கு கற்பு தான் முக்கியம் என்று கூறி பல்வேறு இடங்களில் கட்டில்லாமல் சுத்தும் ஆண்களுக்கு உரைக்கும் படி தனது கவிதையில் பெண்கள் கற்புடன் இருக்க வேண்டும் என்றால் ஆணும் கற்புடன் தான் இருக்கவேண்டும் என்று கூறி பெண் இனத்தை தலை நிமிரச் செய்தவர்களில் முதன்மையானவர் பாரதியே ஆவார். இப்பெண்ணியத்தை பற்றி பாரதியின் புதுமைப் பெண்கள் என்ற தலைப்பில் அமைந்த பாடலில், **ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் (புதுமைப் பெண்கள், பா - 4)** என்ற இடத்தில் ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்தால் தான் இந்த உலகம் அறிவியலில் வளர்ச்சி அடையும் என்கிறார். ஆண்களை விட பெண்கள் அறிவில் சிறந்தவள். ஆண் உடல் வலிமையில் சிறந்தவன் எனவே இருவரும் நிகராக இருப்பின் அறிவியலில் நம் நாடு மேலோங்கும் என்கிறார். ஆணும் பெண்ணும் சமம் என்ற வரிகளில் பெண்களை தாழ்வாக எண்ணி அவர்களை கொடுமைப்படுத்துபவர்களுக்கும் இப்பாடல் கொண்டு எடுத்துரைத்துள்ளார். இதேபோல்,

**பாவையர் வாழ்க்கை என்றும்**
**வீடு காப்பது – எங்கள்**
**பாரதத்துப் பெண்மை**
**இன்று நாடுகாப்பது**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

**சேவை செய்யும் பெண்மை**

**இன்று அதிகமானது. (கண்ணதாசன் கவிதைகள், பா - 6)**

என்ற பாடல் கண்ணதாசன் அவர்கள் பாரதியாரை போன்று பெண்களும் இன்று வீட்டினை மட்டும் காத்து நிற்காமல் நாட்டை காப்பதற்காகவும் வருவது அதிகமாகி விட்டது என்று கூறியிருக்கிறார் இவ்விடத்தில் ஆணிற்கு பெண்ணும் சமம் என்று கூறும் நிலையை காண முடிகிறது.

**பெண்ணிற்கு உண்டான குணங்கள்**

பெண்ணிற்கான குணங்களை கூறும் இடத்தில் பெண் என்பவள் ஒரு பொறுமையானவள். அனைத்து வேதனைகளையும், மகிழ்ச்சிகளையும் தன்னுள் அடக்கி வைத்து காக்கும் குணம் உடையவள் என்று பல்வேறு விதமாக கூறப்படுகின்றன. பெண்ணிற்கு உண்டான நான்கு குணங்களாக பிங்கல நிகண்டு பக்கம் - 64ல்- *நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு* போன்றவையே பெண்களுக்கு உண்டான நான்கு குணமாகும் என்கிறது. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் பொருளியலில் பெண்ணிற்குண்டான இயல்புகளாக,

**அச்சமும் நாணமும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (களவியல், பா - 96)**

என்ற நூற்பாவில் அச்சமும், நாணுதலும், மடத்தனத்தனமும் இம்மூன்றும் பெண்டிர்க்கு உரியன என்று தொல்காப்பியம் களவியலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ள அச்சத்தையும் நணத்தையும் கண்டு அஞ்சாமல் தூக்கி எறிந்து விட்டு வாழும்படி பாரதியார் நல்ல குடியில் பிறந்த பெண்களுக்கு உண்டான குணங்களாக தமது கவிதையில்,

**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**

**ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு**

**நற்குடிப் பெண்ணின் குணங்களாம் (புதுமைப் பெண்கள், பா - 4)**

என்ற வரிகளில் நாணமும், அச்சமும் நாய்களுக்கு உண்டான குணங்கள் இவை பெண்களுக்கு தேவை இல்லை. நல்ல குடியில் பிறந்த பெண்களுக்கு மேன்மைமிக்க அறிவு, நன்மை பொருந்திய அறநெறிகள், மனத் துணிவும், மிக்க விடுதலை உணர்வு இவையே பண்புகளாகும். இவ்வாறு பெண்கள் எங்கும் எதற்கும் தலைகுனிந்து அழுதுகொண்டே இருக்கவே, அச்சப்படவோ தேவையில்லை என பெண்களை முன்னேற்ற விரும்புகிறார் பாரதியார். பெண்களை அடிமைப்படுத்தும் இச்சமுதாய கோட்பாடுகளையும் கட்டமைப்புகளையும் உடைத்து எறிந்து வாழ வேண்டும் என்பதை முன்னிறுத்தும் வகையில் மாறிய கவிதை படைத்திருப்பதை காண முடிகிறது.

**பெண்ணிற்கு உண்டான நெறி**

பெண்கள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் வீட்டிற்குள் அடுப்பூதி கொண்டு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

படிக்காமல் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து கொண்டு ஒரு அடிமையைப் போன்று வாழும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதுடன் அவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நெறிகளை வகுத்திருந்த காலச் சூழ்நிலையில், அந்த அடிமை நிலையில் இருக்கும் பெண்களுக்கு புரியும்படி பாரதியார் எடுத்துரைக்கிறார். பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அவர் சில நெறிமுறைகளை கூறுகிறார். அவை,

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம் (புதுமைப் பெண்கள், பா - 7)**

என்ற பாடலில் பெண்கள் எப்பொழுதும் நிமிர்ந்து நடக்கும் நடையையும், எதையும் நேருக்கு நேர் பார்க்கும் தன்மையும், இந்த பூமியில் எதற்கும் எங்கும் யாருக்காகவும் அஞ்சாமல் இருக்கும் சுயகவுரவம் உடைய பெண்கள் என்றும் தடம் மாறுவது இல்லை என்று பெண்கள் எப்படி இருப்பது அவர்களுக்கு சிறப்பு பயக்கும் என்று கூறுகிறார். இதேபோல்,

**அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்**
**அவல மெய்திக் கலையின்றி வாழ்வதைஉமிழ்ந்து**
**தள்ளுதல் பெண்ணற மாகுமாம் (புதுமைப் பெண்கள், பா - 7)**

என்ற வரியில் மிகப்பெரிய அறியாமையால் ஏதேனும் ஒரு தவறானவருடன் வாழ்க்கையில் சிக்கி துன்பப்பட்டு வாழும் வாழ்க்கையை 'ச்சி' என தூக்கி எறிந்து விட்டு வந்து வீரமாக வாழ்வதே பெண்களுக்கு உண்டான நெறியாக பாரதியார் கூறுகிறார். இந்த பாடல் வரிகளின் மூலம் பாரதியார் பார்வையில் பெண்கள் இருக்கும் நிலையை போல பெண்கள் மாறுவதால் பெண் சமூகம் முன்னேற்ற பாதையை அடையும். இன்று ஓரளவு அச்சூழல் இருப்பதை நாம் காணலாம்.

**பெண்மை வாழ்க**

பெண்கள் அன்றைய காலகட்டத்தை விட இன்றைய சூழலில் பெரும் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அதேபோல பல இன்னல்களை அவர்கள் இந்த சமுதாயத்தில் இன்றும் அனுபவிக்கின்றனர். சிறுமிகள் முதல் முதியவர்கள் வரை அனைத்து பெண்களும் ஏதேனும் ஒரு துன்பத்தை தன் மனதிற்குள்ளே சுமந்து கொண்டுதான் இருக்கின்றனர். குறிப்பாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி அவற்றை வெளியே யாரிடமும் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு சற்றே இச்சூழல் மாற்றமடைந்து வருகிறது. இவ்வாறு பெண்கள் படும் துயரம் ஒரு புறமிருக்க பல பெண்கள் சாதனை உலகில் தமது கால் தடத்தை ஒவ்வொரு நாளும் படைத்துக் கொண்டே இருக்கின்றனர். ஆசிரியராகவும், மாணவராகவும், வக்கீலாகவும், அரசியல்வாதிகளாகவும்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

சினிமா துறைகளிலும் என பல பெண்கள் அத்துயரினை முறியடித்து தமக்கு விருப்பமான துறைகளில் சாதித்து கொண்டே இருக்கின்றனர். இப்படி மனிதப் பிறவியிலே தலைசிறந்த பிறவியான பெண் பிறவிகளை வாழ்த்தி பாரதி தமது கவிதையில்,

**பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா**
**பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா (பெண்மை வாழ்க, பா. - 1)**

என்ற வரிகளில் பெண்மையை பாரதி போற்றும் விதத்தை காணலாம். பெண்களை வாழ்க என்று வாழ்த்தலாம். பெண்களை வெல்கென்று கூத்திடு ஆடலாம் என்று மகிழ்ச்சி பெறு வெள்ளத்தில் பெண்களை தமது வாயால் வாழ்த்தி உரைக்கிறார். இதேபோல்,

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் - 56)**

இவ்விடத்தில் பெண்ணானவர் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் தனது கற்பு நெறி தவறாமல் காத்து வரும் பெண்களை வாழ்க என வாழ்த்தும்படி வள்ளுவர் கூறியிருப்பதை காணலாம்.

**பெண் உறவுகள்**

ஒரு பெண் என்பவள் முதலில் தனது பெற்றோருக்கு ஒரு குழந்தையாகவும், சிறிது காலத்திற்குப் பிறகு கணவனுக்கு ஒரு நல்ல மனைவியாகவும், பின் தனது குழந்தைகளுக்கு அம்மா எனவும் பல நிலைகளில் அழைக்கப்படுகிறாள். சங்க காலந்தொட்டு இன்றுவரை பல பெண் இறப்பதற்கு முதன்மையான காரணமாக விளங்குவது வரதட்சனை. கால ஓட்டத்தால் ஓரளவு வரதட்சனை அழிந்துவிட்டது. இருப்பினும் அதன் தாக்கம் இன்னும் தீர்ந்த பாடில்லை. ஆனால் பெண்கள் எல்லா இடத்திலும் பணிபுரிகின்றன நிலை ஏற்பட்டுவிட்டது. பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த காலமெல்லாம் மாற்றமடைந்து விட்டது. கணவர்களே! தங்களது மனைவிகளை படிக்கவைக்க முன்வருகின்றனர. மகள், மனைவி, அம்மா என்ற மூன்று நிலைகளிலும் பெண்கள் குடும்பத்தை காக்க பாடுபடுகின்றனர். கணவனால் எத்தனை துன்பப் பட்டாலும், தனது குழந்தைக்காக இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டு வாழ்கின்றனர் பெண்கள். இப்படி உறவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பெண்களைப் பற்றி பாரதியார் தமது நூலில்,

**வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா**
**மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்**
**கலிய ழிப்பது பெண்கள் அறம் அடா**
**கைகள் கோர்த்து களித்து நின்றாடுவோம் (பெண்மை வாழ்க, பா. - 2)**

ஒவ்வொரு குழந்தைக்கும் அனைத்து உணவுகளை விடவும் அதிக அளவு ஆற்றலை கொடுப்பது தாய்ப்பால் மட்டுமே ஆகும். அதே போல் ஒவ்வொரு ஆணுக்கும் தன் மானத்தைக் காத்து

E-ISSN: 2581-7140
Volume - 5, Spl. Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

கொண்டு வருவது மனைவியினுடைய சொற்கள் பெண். இப்பாடலில் தாய்மையின் சிறப்பையும், இதேபோல், மனைவியின் அறத்தையும் கூறுகிறார். தாயைப் பற்றி,

**அன்ன மூட்டிய தெய்வ மணிக் கையின்**

**ஆணை காட்டில் அனலை விழுங்குவோம் (பெண்மை வாழ்க, பா. - 9)**

என்ற வரிகளில் நமக்கு உணவு ஊட்டிய தெய்வமாகிய அத்தாய் தன் ஒளிபொருந்திய கரத்தால் சுட்டிக்காட்டி உத்தரவிட்டால் நெருப்பை கூட உண்போம். என்று தாய்மைக்கு மதிப்பளித்தும், அவர்களை போற்றியுள்ளார். தாயை தவிர இவ்வுலகில் வேறொன்றும் முக்கியமில்லை என்பதை உணர்த்தும் விதத்தில் பாரதியார் கூறியுள்ளார். இவ்வாறு பெண்களின் உறவு நிலைக்கும் முக்கியத்துவம் அளித்து போற்றி புகழ்ந்து தமது கவிதைகளில் படைத்துள்ளார் பாரதியார் என்பதற்கு அவரது வரிகளே சாட்சி.

**நரம்புஎழுந்து உலறிய நிரம்பா மென்தோள்**
**முளரிமருங்கின் முதியோள் சிறுவன்**
**படையழிந்து மாறினன் என்று பலர் கூற**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்**
**முலை அறுத்திடுவென் யான் எனச்சினைஇ**
**கொண்ட வாளொடுபசுபிணம் பெயரா**
**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே (புறம், பா. - 278)**

காக்கை பாடினியார் நச்செள்ளையார். ஒருகால், வீரன் ஒருவன் போரில் பகைவர்களால் வாளால் வெட்டப்பட்டு இறந்தான். அவன் உடல் பல துண்டுகளாக வெட்டப்பட்டுக் கிடந்தது. அவன் எவ்வாறு இறந்தான் என்று அறியாத பலர், அவனுடைய தாயிடம் சென்று, "உன் மகன் பகைவர்க்குப் புறமுதுகு காட்டிப் போரில் இறந்தான்." என்று பொய்யாகக் கூறினர். அவள் வயதானவளாக இருந்தாலும், தன் மகன் புறமுதுகு காட்டி இறந்திருப்பானானால் அது தன் மறக்குலத்திற்கு இழுக்கு என்று கருதி, *என் மகன் புறமுதுகு காட்டி இறந்திருப்பானானால், அவன் பால் குடித்த என் முலைகளை அறுத்தெறிவேன்.*என்று வஞ்சினம் உரைத்தாள். இவ்விடத்தில் பெண்ணின் வீரத்தை இப்பாடலில் வியந்து பாடி இருப்பதை காணலாம். இப்பாடலில் வீரம் மட்டுமின்றி ஒரு தாயின் அன்பும், என் மகன் என்றும் புறம் ஒதுகிட்டு ஓட மாட்டான் என்று கூறும் இடத்தில் அவள் தன் மகன் மீது கொண்ட நம்பிக்கையும் வெளிப்படுவதை காணலாம்.

**பெண் விடுதலையும் பெண் கல்வியும்**

பெண் விடுதலையை பறைசாற்றும் விதமாக பாரதியார் பல கவிதைகளைப்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

படைத்துள்ளார். பெண்களுக்கு கல்வியும், விடுதலையும், வீரமும் இன்றியமையாதது. என்பதை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் பல கவிதைகளை எழுதி இவ்வுலகிற்கு அளித்தவர். முன்பு பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைத்து ஆண்களுக்கு பணிவிடை செய்ய வைத்த காலம் இன்று ஓரளவு மாறிவிட்டது. காரணம் பெண்கள் கல்வி கற்பது தான் அனைத்து துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகரான பொறுப்புகளில் இருப்பதே பெண் விடுதலைக்கு ஒரு சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். மேற்கூறியவாறு பெண்கள் கல்வி கற்பதற்கு எதிரானவர்களை பற்றி பாரதியார் *பெண் விடுதலை* என்னும் தமது கவிதையில்,

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப் போம் என்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் (பெண் விடுதலை கும்மி, பா. - 2)**

மங்கையர்கள் புத்தகங்களை தேடுவது கூட பாவம் என்று கூறியவர்கள் இன்று அழிந்து விட்டன. பெண்கள் வீட்டில் இருந்தால் மட்டும் போதும் என்று அவர்களை அடைத்து வைத்தவர்கள் இன்று நாணத்தால் தலைகுனிந்து நிற்கின்றனர். காரணம் பெண் விடுதலை கிடைத்துவிட்டது என்பதால் என்கின்றார். பாரதியார் அதேபோல் பாரதிதாசன் தன் கவிதைகளில்,

**கல்வி இல்லாத பெண் களர் நிலம்**
**அந்த நிலத்தில் புல் விளைந்திடலாம்**
**நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை (குடும்ப விளக்கு, பா. - 6)**

பாரதிதாசன் குடும்ப விளக்கு என்ற தனது நூலில் அமைந்த பாடலில் பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். கல்வியில்லை என்றால் பெண்கள் நல்ல புதல்வர்களை பெற்று அவர்களுக்கு உண்டான தகுதிகளையும், நல்ல குணங்களையும் கற்றுத் தர முடிவதில்லை. அதனால் நல்ல புதல்வர்கள் பிறப்பதும் இல்லை பிறந்தால் அவர்கள் நல்ல குண நலன்களுடன் இருப்பது இல்லை. எனவே பெண் கல்வி என்பது நல்ல குழந்தைகளை உருவாக்குவதற்கும் முக்கியமானதாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது நாடக நூலில் கூறியதைப் பற்றி உஷா தேவி அவர்களின் ஆய்வுகளில் பெண்கள் கல்வி கற்றால் மட்டுமே அவர்களின் அறிவை பெருக்கிக் கொள்ள முடியும் என்கிறார். இதை *நச்சுக்கோப்பை* என்னும் நாடகத்தில், “படிச்சிட்டதுனா காதலும் கத்திரிக்காயும் பேசுது இதெல்லாம் படிக்க வச்சது நம்ம பிசகு பாருங்க” (உஷா தேவி) என்று கூறும் வரிகளில் அவர்கள் பெண்கள் தனது வாழ்க்கையை முன்னேற்றவும், விடுதலை உணர்வை அடையவும் கல்வியே இன்றியமையாதது என்று கூறுவதை இங்கு காண முடிகிறது. இந்தியாவில் பெண் கல்வியானது இடைக்காலத்தில் தான் இல்லாமல் போய்விட்டது. ஆனால், தமிழ்நாட்டில் சங்க காலத்தில் பெண் கல்வி வழக்கில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

இருந்தது என்பதை நமது சங்க இலக்கியங்களின் மூலம் காண முடிகிறது. அந்த நிலை இடைக்காலத்தில் சற்று மாறி பெண்கள் கல்வி கற்காத நிலைக்கு தள்ளப்பட்டனர். பிற்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய வைதீக மதங்கள் ஆண்களுக்கு மட்டுமே கல்வியை அளித்தன. பெண் கல்வியை ஊக்குவிக்கவில்லை என்பது இந்த கழுகுமலை கல்வெட்டுகளின் மூலமாக காண முடிகிறது. (இலக்குவன், இரா). இதேபோல் பாரதியார் தனது மற்றொரு கவிதையில் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி,

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே**
**பெண்இளைப்பில்லை**
**காணென்று கும்மியடி (பெண் விடுதலை கும்மி, பா. - 6)**

என்னும் பாடலில் உலகில் ஆட்சி அதிகாரங்களை கைகளும் சட்ட வரையறைகளை நிர்ணயம் செய்வதற்கும் மங்கையர் ஆகிய நாங்கள் இங்கு வந்தோம். பல முயற்சிகளை செய்து அறிவைப் பெறுவதில் ஆணுக்குப் பெண் சற்றும் சளைத்தவள் அல்ல என்று பெண்களை ஆணுக்குச் சமமாக கூறியுள்ளார். அதேபோல் கற்பினும் ஆணும் பெண்ணும் சமம் என்பதை,

**கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் (பெண் விடுதலை கும்மி, பா. - 5)**

என்ற இடத்தில் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே உரிய ஒழுக்கமாக சமுதாயத்தால் சுட்டப்படுகிறது. அதை உடை திடவே பாரதியார் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் இல்லை அது ஆண்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டிய ஒழுக்கம். இருபாலருக்கும் பொதுவான ஒன்று. கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் இருக்க வேண்டிய ஒழுக்கம் என்கின்றார்.

**ஆன்ற கற்பித்தல் சான்ற பெரிய**
**அம்மா அரிவையோ அல்லன் (அகநானூறு, பா. - 198)**

என்ற *அகநானூறு* பாடலில் தலைவியை சிறந்த கற்பினையுடைய பெருமைக்குரியவள் என்று கூறும் இடத்தில் கற்பில் சிறந்தவளாகர் கூறுவதைக் காணலாம். பாரதியாரும் இதேபோல் ஆணையும் கற்பில் சிறந்தவனாக இருக்க வேண்டும் என்றே கூறுகிறார். பெண்ணிற்கு மட்டும் கற்பு பொதுவானதல்ல ஆணுக்கும் பொதுவானதே எனக் கூற முனைகிறார். பெண்களுக்கு அவர்களுக்கு தேவையான உரிமை எப்போது கிடைக்கும் என்று கூறும் இடத்தில், வீடுகளிலும், நாட்டிலும் முடிவெடுக்கும் அனைத்து அதிகாரங்களும் பெண்களுக்கு கிடைத்து விட்டால் *ஆணுக்கு கிங்கு பெண் இழைப்பில்லை* என்ற பாரதியாரின் கூற்று மெய்யாகும். என்று புதுவை யுகபாரதி அவர்கள் தனது "*இலக்கியமும் பெண்களும்*" என்ற ஆய்வில் இதற்கு பெண்கள் கல்வி கற்பது முதன்மையானது எனக் கூறக் காண்கின்றோம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

பெண்கள் சுதந்திரம் அடைவதைப் பற்றி கூடும் இடத்தில் பல்வேறு மகான்கள் பிறந்து வளர்ந்த நாட்டில் மண் உண்ணிப் பூச்சிகள் நடமாடுவதை கண்டு ஒவ்வொரு பெண்களும் மனம் புலங்க வேண்டும். தன் ஆண் குழந்தைகளுக்கு அறிவு, உயர் குணம், சரீரத் திடமை, மனோ தைரியம், ஆண்மை முதலியவற்றை கற்பித்துக் கொண்டிருக்க வேண்டும். என்கின்ற இவைகள் களையப்படும் போது தான் பெண்களின் சுதந்திரம் மீட்டெடுக்கப்படும் என மூர்த்தி அவர்கள் "பெண் விடுதலையின் அபிவிருத்தி பாரதி" ஆய்வில் கூறியுள்ளார். இவ்விடத்தில் ஆண்களுக்கு அவர்களுக்கு உண்டான குணங்கள் செய்முறைகள் முதலியவற்றை பற்றி பெற்றோர்களின் சிறு வயது முதல் கற்பித்து வளர்க்க வேண்டும் என்ற உணர்வை பற்றி கூறியிருக்கிறார்.இதேபோல்,

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்...**
**ஆண்களோடு பெண்களும்**
***சரிநிகர் சமானமாக***
**வாழ்வோம் இந்த நாட்டிலே (விடுதலை, பா - 3)**

என்ற பாடலில் பெண்களை தாழ்மையானவர்களாக நடத்துகின்ற அறியாமையை தீயிட்டு எரிப்போம். இவ்வுலக வாழ்வில் ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலையை மாற்றிக்கொண்டு ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம். இந்த நாட்டிலே என்று பாரதியார் ஆணும் பெண்ணும் சமம் என்று தமது கவிதையில் கூறுகிறார். இவ்வாறு பெண் என்பவள் யாருக்கு அடிமை இல்லை என்பதை உணர்த்தியவர் பாரதியார். பெண் விடுதலை என்னும் தலைப்பில் கூறப்பட்ட கவிதைகள் அனைத்தும் பெண்களின் விடுதலையை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக படைத்துள்ளார் என்பதை மேற்கூறிய சான்றுகளின் வழி அறியமுடிகிறது.ஒரு பெண் கல்வி கற்றாள் என்றால் அது அவளுக்கு மட்டுமின்றி அவள் குடும்பத்திற்கும் அது பல முன்னேற்றங்களை தருகிறது. இன்றைய காலகட்டத்தில் பெண் முன்னேற்றத்திற்கு சான்றாக ஜான்சி ராணி, கல்பனா சாவ்லா, பி. டி. உஷா, மேரி காம், பி. வி சிந்து, மித்தாலி ராஜ் போன்றோரைப் போலவும் விளங்கலாம். இந்த நூற்றாண்டில் பெண்கள் விளையாட்டு துறையில், பொருளாதாரத் துறையிலும், கல்வி நிலையங்களிலும், அரசியலிலும் தங்கள் கால் பதித்து வருகின்றனர் என்பதை நாம் கண்கூட காண முடிகின்றது. இன்று மட்டுமின்றி அன்றே சங்க காலத்திலும் நமது பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பதை ஔவையாரை போன்றோர் மூலம் நாம் காணலாம்.

**முடிவுரை**

பெண்கள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு கணவன் அடிக்கும் அடிகளையும், மற்றவர்களின் ஏச்சுப் பேச்சுக்களையும் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருப்பது தமது குழந்தைகளின் வாழ்க்கைக்காக மட்டுமே. இந்த நிலைமை அன்றிலிருந்து இன்று வரை

E-ISSN: 2581-7140
Volume - 5, Spl. Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

மாறவில்லை. பெண்கள் பல இடங்களில் பல துறைகளில் ஆண்களுக்கு ஒப்பான வேலை செய்தாலும், அவர்களை அடிமையாகவேபார்கின்றனர். இப்படிப் பார்க்கும் நிலைஇன்றும் ஓரளவுதான் மாற்றம் நிகழ்ந்துள்ளது. ஆனால் பெண் கல்வியில் நம் மக்கள்நன்றாகவே முன்னேறி உள்ளனர். பெண்கள் முன்னேறவே நாடு முன்னேறும். இன்று அதிகமாக கிராமப்புற மாணவிகளே படிப்பதற்காக தனது கிராமங்களை விட்டு வெளியே வருகின்றன. அவ்வாறு வரும் பெண்கள் தனது படிப்பை நகர்புறத்தில் முடித்துவிட்டு அங்கேயே வேலைக்கு செல்லும் நிலையை நாம் பார்க்கிறோம். அது மட்டுமல்ல இன்று பெண்கள் வெளிநாடுகளுக்கும் தனியாகச் சென்று கல்வி கற்கின்றனர் அத்துடன் நின்று விடாமல் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் பணியாற்றுகின்றனர். இவ்வாறு பாரதியார் பெண் என்பவள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும், யாருக்கும் அஞ்சாமல் தனது முயற்சியால் வெற்றியை அடைய வேண்டும். பெண்கள்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் தனது சுய கௌரவத்தை உயர்த்திட வேண்டும். என்றும் பாரதியார் அன்றே அரும்பாடு பட்டு தனது கவிதைகளில் பெண்களுக்கு வீரத்தை ஊட்டி உள்ளார் என்றால் அது மிகையாகாது. இப்படி நமக்காக போராடிய பாரதியாரை நாம் பெருமைப்படுத்த வேண்டும். பெண்மையை போற்றுவோம் !
பெண்மை வாழ்க!

**துணை நூல் பட்டியல்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் (பொருளதிகாரம்)*. சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2005.

[2] இந்திரா. “பெரியார் பார்வையில் சமயமும் பெண்ணும்” *கீற்று மின்னிதழ்*, டிசம்பர்-2019.

[3] இலக்குவன், இரா. “கழுகுமலை சமயப் பள்ளியில் பெண் கல்வியும், இருப்பாலர் கல்வி முறையும்.”*வல்லமை* மின்னிதழ், ISSN: 2348-5531, மே - 2022.

[4] உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்* தொகுதி -1. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 2017.

[5] உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்* தொகுதி – 2. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 2017.

[6] உஷா தேவி, நா. “கலைஞர் நாடகங்களில் பெண்ணிய சிந்தனைகள்.” *அரண் பன்னாட்டு மின்னிதழ்*, ISSN: 2582-399X ஜூன்-2023.

[7] கண்ணதாசன். *கண்ணதாசன் கவிதைகள்.* கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2012.

[8] சாரதாம்பாள், செ. *பெண்ணிய உளப் பகுப்பாய்வும் பெண் எழுத்தும்.* உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 2005.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Spl. Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

[9] பாரதிதாசன். *குடும்ப விளக்கு*. செந்தமிழ் நிலையம், திருச்சி, ஏழாம் பதிப்பு – 1956.

[10] *பிங்கல நிகண்டு*. கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவம் சித்தாந்த புத்தகப் பதிப்பகக் கழகம், திருநெல்வேலி. முதல் பதிப்பு - 1968.

[11] புதுவை யுகபாரதி. “இலக்கியமும் பெண்களும்.” *கீற்று*, மின்னிதழ், அக்டோபர் - 2020.

[12] பேராசிரியர் (உரை). *தொல்காப்பியம் (பொருளதிகாரம்)*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம், திருநெல்வேலி, முதல் பதிப்பு - 1951.

[13] ராமாத்தாள், கு. மா. *பெரியாரின் பெண்ணியம்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு - 2007.

[14] மூர்த்தி, இரா. “பெண் விடுதலையின் அபிவிருத்தி.” பாரதி, தமிழ் *இலக்கியங்களில் மனித உறவுகள், தேசிய கருத்தரங்க ஆய்வுக் கோவை*, மாசிவன் பதிப்பகம், விழுப்புரம், ISBN - 978-81-950860-3-0, 2021.

[15] ஜெயக்குமார், சி. *திருக்குறள்*. பரிமேலழகர் உரை, முதற்பதிப்பு - 2019.

## References

[1] Ilampuranar. *Tholkappiyam (Porulathigaram).* Sarada Publishing House, Chennai, First Edition - 2005.

[2] Indira, “Periyar Parvail Samayamum Pennum.*” Keetru E- Journal*, December - 2019.

[3] Ilakkuvan, R. “Kalgukumalai Samayappallil Pen Kalvium Irupaalar Kalvi Muraiyum.” *Vallammai e-journal*, ISSN: 2348 - 5531, May - 2022.

[4] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Uraium Volume*-1. Varthamanan Publishing House, Chennai - 2017.

[5] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Uraium Volume – 2*. Varthamanan Publishing House, Chennai – 2017.

[6] Usha Devi. “Kalaigar Nadakangalilpenniya Sinthanai.” *Aran International E-Journal of Tamil Research*, ISSN: 2582 - 399X, June - 2023.

[7] Kannadasan. *Kannadasan Kavithaikal*. Kannadasan Publishing House, Chennai. First Edition - 2012.

[8] Saradhampal, S. *Penniya Ulappakuppaiyvum Pen Eluthum*. World Tamil Research Institute, Chennai - 2005.

[9] Bharatidasan. *Kudumba Vizhakku*. Senthamil Nilayam, Trichy, Seventh Edition - 1956

[10] *Bingala Nikandu*. Kazhaga Veliydu, Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Corporation, Tirunelveli. First Edition - 1968.

[11] Puduvai Yugabharathi. “Ilakkiyamum Pengalum” *Keetru*, E-Journal, October - 2020.

[12] Peraciriyarurai. *Tolkappiyam (Porulathigaram*). South Indian Saiva Siddhanta Book Publishing Corporation, Tirunelveli, First Edition - 1951.

[13] Murthy, R. “Pen Veduthalain Abiviruthi Bharathi.” National Seminar Proceedings, Masivan Pathippagam, Viluppuram, ISBN - 978-81-950860-3-0, 2021.

[14] Ramathal, K. Ma. *Periyar Penniyam*. World Tamil Research Institute, Chennai, First Edition - 2007.

[15] Jayakumar, C. *Thirukkural. Parimelazagar Urai*, First Edition - 2019.

E-ISSN: 2581-7140
Volume - 5, Spl. Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.